இந்த வகை மரம் தமிழ்நாட்டுக் காடுகளிலேயே இல்லை என்று சொல்லப்பட்டது என்றால், அது பொதுவாகச் சொல்லப் பட்ட கருத்து. இன்றைக்கும் தமிழ்நாட்டுக் காடுகளிலேயே எங்கோ ஒன்றிரண்டு இடங்களிலே, அதுவும் ஆந்திர எல்லையிலே சில இடங்களில்தான் இவ்வகை மரங்கள் இருப்பதாகச் சொல் கிறார்கள். இதுவரை நம்முடைய வனத் துறையிலிருந்து இவ்வகை மரங்கள் வெட்டப்பட்டதாகவோ, விற்கப்பட்டதாகவோ தகவல் இல்லை. ஆகவே அதைப் பரிசீலித்தபோது, நாமே அதைப் புதிதாக இப்போது வளர்க்க முயற்சி செய்திருக்கிறோம், இன்னும் வளர்ந்து வரவில்லை, வளர்ந்து அந்த மரம் விலையா வதற்கு 100 ஆண்டுகள் ஆக வேண்டும் என்று வனத் துறையிலி ருந்து தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வாய்ப்பினைத் தந்ததினால், இதை மிகவும் தெளிவாக விளக்கிச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் எப்படித் தெளிவாக தம் எண்ணங்களை விளக்ினாரோ அதேபோன்று மிகத்தெளிவாக என் நிலையையும் விளக்கியிருக்கிறேன். ஆகவே திட்டமிட்டு, தவறான தகவல்களைத் தரவேண்டும் என்பது நோக்கமல்ல. என்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் மூன்றிற்கும் விளக்கம் கூறும் வகையில்தான் என்னுடைய பதிலைத் தந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சனையைக் குறித்து பின்னர் தீர்ப்பு வழங்கப்படும்.

(இ)உறுப்பினர்கள் திரு. ரகுமான்கான் அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து டாக்டர் சமரசம் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்னையை திரு. ரகுமான்கான் அவர்கள் மீது கொடுத்திருக்கிறார்கள். திரு. ரகுமான்கான் அவர்களுக்கு இன்னும் இது பற்றிய நோட்டீஸ் அனுப்பப்படாத தால், அது அனுப்பப்பட்ட பின்னர் இந்த அவையிலே எடுத்துக் கொள்ளப்படும்.

[முற்பகல் 11.30]

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினர் டாக்டர் சமரசம் கொடுத்திருக்கிற உரிமைப் பிரச்னையை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன், எடுத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் இரண்டையும் சேர்த்து உரிமைக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன். ஏனென்றால் அப்போதுதான் விவரமாக ஆராயமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் என்ன கொடுத் திருக்கிறார்கள் என்பதை நான் பார்க்கவேண்டும். இதுகுறித்து தீர்ப்பு வழங்கும் பொறுப்பை உங்களிடம் விட்டுவிட முடியாது. தீர்ப்பு அளிப்பதை என்னிடம் விட்டுவிடுங்கள். நாளை எடுத்துக் கொள்ளலாம்.

டாக்டர் மு. கருணாநிதி: திரு. ரகுமான்கான் மீது டாக்டர் சமசரம் ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பியிருக்கிறார். அதையும் இப்போது எடுத்து விவாதிப்பதை நாங்களே ஆதரிக்கிறோம், அந்த உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு வழங்குகிற உரிமையை என்னிடம் விட்டு விடுங்கள். உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு முன்னால் எப்படி உரிமைக் குழுவிற்கு அனுப்புவது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இதில் தாங்கள் தீர்ப்பு சொல்லிவிட்டீர்கள். நோட்டீஸ் போகவில்லை, நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் ரெடி. நோட்டீஸே எனக்குத் தேவை இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2 ஆம் தேதி (பிப்வரரி), திங்கட்கிழமை இது எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து....

4. ஒழுங்குப் பிரச்சினை—தலைமை நீதிபதி நியமனம் குறித்த கவன ஈர்ப்பு அனுமதிக்கப்பெறுவது.

*திரு. என். எஸ். வி சித்தன்: பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்போது நீங்கள் 54—வது விதியின்கீழ் ஒரு அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை சபையில் எழுப்ப அனுமதி அளிக்க இருக்கிறீர்கள். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மாற்றல் சம்பந்தமாக ஒரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் போடப்பட்டு அது கான்ஸ்டிட்யூஷன் பெஞ்ச்—க்கு ரெபர் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சென்னை உயர்நீதிமன்றம் இந்த வழக்கு குறித்து விசாரிப்பதற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. எனவே இப்பிரச்னை குறித்து நமது மன்றத்தில் 54-வது விதியின்கீழ் விவாதிப்பது என்பது நீதிமன்றத்தின் விவகாரத்தில் தலையிடுவதாகாதா? இது சப்—ஜுடீஸ் ஆகுமல்லவா? இதே மாதிரி நீங்கள் அனுமதிப்பீர்களேயானால் இது ஒரு தவறான முன்மாதிரியாக இருக்கும் என்பதையும் தயவுசெய்து நீங்கள் தீர்ப்பு வழங்கிவிட்டு தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Thiru C. Ponnaiyan ; The subjecs-matter that is covered by the writ petition is not figured in this. So the Hon. speake may take up this issue.

திரு. என். எஸ். வி சித்தன்: நாம் எந்தப் பிரச்சனையை எடுத்துக்கொள்கிறேமோ அதே பிரச்னைதான் சென்னை உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. உச்ச நீதி மன்றத்தினால் தடை விதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இதை அனுமதிப்பது என்பது ஒரு